# ஈழத்தமிழரின் சமூக அரசியல் வளர்ச்சிக்கு ஈழகேசரி ஆற்றிய பங்களிப்பு

(PR)
089.94811 072
ARU

LIBRARY
26 SEP 2006
Eastern University, Sri Lanka.

கந்தையா அருந்தவராஜா B.A (Hons)

Reg No – M.Phil / H / 97 / 03

ExM.Phil03
Thesis
Library - EUSL

PERMANENT REFERENCE

63335

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் முதுதத்துவமாணிப் பட்டம் (வரலாறு) வழங்குவதற்காக உயர் பட்டப்படிப்புக்கள் பீடத்தினூடாக 14-03-2003 இல் சமர்ப்பிக்கப்பட்ட ஆய்வேடு

This book / journal was donated by
..........
to the Library,
Eastern University, Sri Lanka
on ..........

வரலாற்றுத்துறை

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்

யாழ்ப்பாணம்

இலங்கை

2003

PROCESSED
Main Library, EUSL

# பொருளடக்கம்


| *விபரங்கள்* | *பக்கங்கள்* |
|---|---|
| ஆய்வாளன் உறுதிமொழி | I |
| மேற்பார்வையாளர் சான்றிதழ் | II |
| நன்றியுரை | III |
| குறுக்கங்கள் | IV |
| பொருளடக்கம் | VII - XII |

## இயல் ~ 01

| | |
|---|---|
| 1. ஈழமும் பத்திரிகைத் துறையும் | **05 – 102** |
| 1.1 ஈழத்தில் பத்திரிகைத் துறையின் தோற்றமும் வளர்ச்சியும் ஓர் அறிமுகம் (ஈழகேசரி வெளிவரும் வரை) | **05 – 32** |
| 1.1.1 பத்திரிகைகளின் தோற்றம் | 06 – 09 |
| 1.1.2 தென்னிந்தியாவில் பத்திரிகைகள் | 09 –12 |
| 1.1.3 தென்னிலங்கையில் பத்திரிகைகள் | 12 – 15 |
| 1.1.4 ஈழத்தில் தமிழ்ப் பத்திரிகைகள் | 15 – 32 |
| 1.2 ஈழகேசரியும் அது எழுந்த காலச் சூழ்நிலைகளும் | **33 – 53** |
| 1.2.1 அரசியல் பின்னணி | 36 – 42 |
| 1.2.2 சமூகப் பின்னணி | 42 – 53 |
| 1.3 ஈழகேசரிப் பொன்னையாவும் அவரது பணிகளும் | **54 – 74** |
| 1.3.1 தனலக்குமி புத்தகசாலை | 58 – 59 |
| 1.3.2 திருமகள் அழுத்தகம் | 59 – 62 |
| 1.3.3 ஈழகேசரி | 62 – 67 |
| 1.3.4 கேசரி | 67 – 67 |
| 1.3.5 சன்மார்க்கசபை | 67 – 70 |
| 1.3.6 சமூகத் தொண்டன் | 70 – 74 |
| 1.4 ஈழகேசரியின் தோற்றமும் அதன் இயல்புகளும் | **75 – 94** |

## இயல் - 02


| | |
|---|---|
| 2. ஈழத்தமிழரின் சமூக வளர்ச்சியில் ஈழகேசரி | **103 – 251** |
| 2.1 ஈழகேசரியும் சாதிப்பிரச்சினைகளும் | **103 – 128** |
| 2.1.1 சமாசன சமபோசனப் பிரச்சினைகள் | 108 – 115 |
| 2.1.2 ஆலயப் பிரவேச மறுப்பு | 115 – 124 |
| 2.1.3 சாதிச்சண்டைகள் | 124 – 128 |
| 2.2 ஈழகேசரியும் சைவாலயங்களும் | **129 – 156** |
| 2.2.1 நிர்வாகக் குறைபாடுகள் | 130 – 134 |
| 2.2.2 தேவதாசிகள் நடனம் | 134 – 140 |
| 2.2.3 பலியிடல் வழக்கம் | 140 – 148 |
| 2.2.4 சைவாலயங்களின் சூழல் | 148 – 149 |
| 2.2.5 அறநிலையச்சட்ட முயற்சிகள் | 150 – 156 |
| 2.3 ஈழகேசரியும் சுப்பிறீம் கோட்டு வழக்குகளும் | **157 – 167** |
| 2.3.1 கொலைக்குற்றங்கள் | 158 – 161 |
| 2.3.2 கடத்தல், கற்பழிப்பு வழக்குகள் | 161 – 164 |
| 2.3.3 களவுகள் முதலிய ஏனைய குற்றங்கள் | 164 – 167 |
| 2.4 ஈழகேசரியும் கல்வி வளர்ச்சியும் | **168 – 199** |
| 2.4.1 சுயமொழிக்கல்வி | 170 – 173 |
| 2.4.2 இலவசக் கல்வி | 173 – 177 |
| 2.4.3 சமயக் கல்வி | 177 – 181 |
| 2.4.4 தொழிற்கல்வி | 182 – 184 |
| 2.4.5 சர்வகலாசாலையின் தோற்றம் | 184 – 189 |
| 2.4.6 பெண்கல்வி | 189 – 195 |
| 2.4.7 ஆசிரியர்கள் நலன் | 195 – 197 |
| 2.4.8 மாணவர்கள் நலன் | 197 – 199 |
| 2.5 ஈழகேசரியும் பொருளாதாரமும் | **200 – 220** |
| 2.5.1 விவசாயம் | 201 – 205 |
| 2.5.2 கைத்தொழில் | 205 – 211 |
| 2.5.2.1 சுருட்டுக் கைத்தொழில் | 207 – 211 |
| 2.5.3 மலையாளப் புகையிலை வியாபாரம் | 211 – 218 |
| 2.5.4 சுதேசியம் | 218 – 220 |

| | |
|---|---|
| 2.6 ஈழகேசரியும் பொதுமக்களும் | **221 – 235** |
| 2.6.1 போக்குவரத்துப் பிரச்சினை | 221 – 226 |
| 2.6.1.1 பஸ்போக்குவரத்து | 221 – 223 |
| 2.6.1.2 புகையிரதப் போக்குவரத்து | 223 – 224 |
| 2.6.1.3 பாலங்கள் | 224 – 225 |
| 2.6.1.4 வீதிகள் | 225 – 226 |
| 2.6.1.5 துறைமுகங்கள் | 226 – 226 |
| 2.6.2 சுகாதாரமும் வைத்தியமும் | 226 – 233 |
| 2.6.2.1 குடிநீர்ப்பிரச்சினை | 226 – 227 |
| 2.6.2.2 வைத்தியசாலைகளின் குறைபாடுகள் | 227 – 229 |
| 2.6.2.3 நோய்கள் | 229 – 233 |
| 2.6.2.3.1 அம்மைநோய் | 230 – 231 |
| 2.6.2.3.2 கசரோகம் | 231 – 231 |
| 2.6.2.3.3 மலேரியா | 231 – 233 |
| 2.6.2.4 பொருட்களின் விலைகள் | 233 – 233 |
| 2.6.2.5 விளம்பரங்கள் | 233 – 235 |

## இயல் – 03

| | |
|---|---|
| 3. ஈழத்தமிழரின் அரசியல் வளர்ச்சியில் ஈழகேசரி | **252 – 394** |
| 3.1 ஈழகேசரியும் அரசியல் திட்டங்களும் | **253 – 298** |
| 3.1.1 டொனமூர் அரசியல் திட்டமும் ஈழத்தமிழரும் | 253 – 274 |
| 3.1.1.1 1931 பொதுத்தேர்தல் | 260 – 261 |
| 3.1.1.2 சர்வஜன வாக்குரிமை | 261 – 263 |
| 3.1.1.3 தேசாதிபதிகளின் அதிகாரங்கள் | 263 – 264 |
| 3.1.1.4 நிர்வாகக் குழுமுறை | 264 – 266 |
| 3.1.1.5 1934 இடைத்தேர்தல் | 266 – 268 |
| 3.1.1.6 அரசாங்க சபை அங்கத்தவர்கள் | 268 – 270 |
| 3.1.1.7 1936 பொதுத்தேர்தல் | 270 – 274 |
| 3.1.2 சோல்பரி அரசியல் திட்டமும் ஈழத்தமிழரும் | 274 – 298 |
| 3.1.2.1 1947 பொதுத் தேர்தல் | 282 – 287 |
| 3.1.2.2 தமிழரசுக்கட்சியின் எழுச்சி | 288 – 289 |
| 3.1.2.3 1952 பொதுத்தேர்தல் | 290 – 294 |

3.1.2.4 1956 பொதுத்தேர்தல் 294 – 298

**3.2 ஈழகேசரியும் ஈழத்தமிழர் போராட்டங்களும் 299 – 355**

3.2.1 பகிஷ்கரிப்புப் போராட்டம் 299 – 306

3.2.2 தேசியக் கொடிப் போராட்டம் 306 – 316

3.2.3 தனிச் சிங்களச் சட்டம் 316 – 329

3.2.4 சத்தியாக்கிரகப் போராட்டம் 329 – 331

3.2.5 கல்லோயாக் குடியேற்றம் 331 – 335

3.2.6 திருமலை யாத்திரை 335 – 338

3.2.7 சிங்கள ஸ்ரீ எதிர்ப்புப் போராட்டம் 338 – 347

3.2.8 பண்டா – செல்வா ஒப்பந்தம் 347 – 355

**3.3 ஈழகேசரியும் தென்னிந்தியத் தோட்டத்தொழிலாளர் பிரச்சினைகளும் 356 – 376**

3.3.1 தோட்டத் தொழிலாளர்களின் வருகை 356 – 359

3.3.2 தென்னிந்தியத்தொழிலாளர்களைக் கட்டுப்படுத்தும் முயற்சிகள் 359 – 372

3.3.2.1 கிராமச் சட்டமும் ஏனைய நடவடிக்கைகளும் 361 – 364

3.3.2.2 இலங்கை - இந்தியக் காங்கிரசின் தோற்றம் 364 – 365

3.3.2.3 சர்வஜன வாக்குரிமை 365 – 368

3.3.2.4 பிரஜா உரிமைச் சட்டங்கள் 368 – 371

3.3.2.5 செலாவணிக் கட்டுப்பாடு 371 – 372

3.3.3 தீர்வு முயற்சிகள் 373 – 376

## இயல் – 04

4. ஈழத்து இலக்கிய வளர்ச்சியில் ஈழகேசரி **395 – 534**

**4.1 ஈழத்து இலக்கியம் ஓர் அறிமுகம் (ஈழகேசரிக் காலம் வரை) 395 – 534**

4.1.1 தோற்றம் 396 – 397

4.1.2 ஐரோப்பியர் காலம் 397 – 400

4.1.3 வளம்படுத்தியவர்கள் 400 – 401

**4.2 தமிழ் பத்திரிகைகளும் இலக்கியப் பணிகளும் பொதுவான நோக்கு (ஈழகேசரிக் காலம்) 402 – 412**

4.2.1 வீரகேசரி 403 – 406

4.2.2 தினகரன் 406 – 409

4.2.3 சுதந்திரன் 410 – 412

| | |
|---|---|
| 4.3 ஈழகேசரியும் ஈழத்தமிழ் இலக்கியமும் | **413 – 419** |
| 4.3.1 நா.பொன்னையாவின் காலம் | 415 – 416 |
| 4.3.2 சோ.சிவபாதசுந்தரத்தின் காலம் | 416 – 418 |
| 4.3.3 இராஜ.அரியரத்தினத்தின் காலம் | 418 – 419 |
| 4.4 ஈழகேசரியும் சிறுகதை இலக்கியமும் | **420 – 449** |
| 4.4.1 குடும்பக் கதைகள் | 431 – 434 |
| 4.4.2 கிராமிய வாழ்வினைச் சித்திரிக்கின்ற கதைகள் | 434 – 436 |
| 4.4.3 காதல் கதைகள் | 437 – 439 |
| 4.4.4 சாதிப்பிரச்சினையுடன் தொடர்புடைய கதைகள் | 439 – 441 |
| 4.4.5 குழந்தைகளின் மனஉணர்வுகளைப் பிரதிபலிக்கின்ற கதைகள் | 441 – 441 |
| 4.4.6 மிருகவதையைச் சித்திரிக்கின்ற கதைகள் | 441 – 442 |
| 4.4.7 பொருளாதார முரண் சம்பந்தமான கதைகள் | 442 – 443 |
| 4.4.8 தொழிலாளர் பிரச்சினைகளைக் கருவாகக் கொண்ட கதைகள் | 444 – 444 |
| 4.4.9 தேசிய உணர்வினைப் பிரதிபலிக்கின்ற கதைகள் | 444 – 445 |
| 4.4.10 வரலாற்றுச் சம்பவங்களைக் கூறுகின்ற கதைகள் | 445 – 445 |
| 4.4.11 விலைமாதர்கள் பற்றிய கதைகள் | 446 – 447 |
| 4.4.12 தத்துவக் கருத்துக்களைக் கொண்ட கதைகள் | 447 – 447 |
| 4.4.13 மொழி பெயர்ப்புக் கதைகள் | 447 – 449 |
| 4.5 ஈழகேசரியும் நாவல் இலக்கியமும் | **450 – 462** |
| 4.6 ஈழகேரியும் நாடக இலக்கியமும் | **463 – 473** |
| 4.6.1 சரித்திர நாடகங்கள் | 467 – 468 |
| 4.6.2 மொழிபெயர்ப்பு நாடகங்கள் | 468 – 468 |
| 4.6.3 சமூக நாடகங்கள் | 468 – 468 |
| 4.6.4 அரசியல் நாடகங்கள் | 468 – 469 |
| 4.6.5 கவிதை நாடகங்கள் | 469 – 469 |
| 4.6.6 ஓற்றயங்க நாடகங்கள் | 469 – 469 |
| 4.6.7 நாடக விமர்சனங்கள் | 469 – 473 |
| 4.7 ஈழகேசரியும் கவிதை இலக்கியமும் | **474 – 499** |
| 4.7.1 அரசியல் கவிதைகள் | 480 – 487 |
| 4.7.1.1 தேசியத்தை வெளிப்படுத்துகின்ற கவிதைகள் | 480 – 482 |
| 4.7.1.2 வகுப்பு வாதத்தைக் கண்டனம் செய்கின்ற கவிதைகள் | 482 – 484 |
| 4.7.1.3 மொழிப்பிரச்சினை தொடர்பான கவிதைகள் | 484 – 486 |

4.7.1.4 இந்தியச் சுதந்திரப் போராட்டங்கள் தொடர்பான கவிதைகள் 486 – 487

4.7.2 சமூகச் சீர்கேடுகள் மூடநம்பிக்கைகள் தொடர்பான கவிதைகள் 487 – 488

4.7.2.1 மதுவினால் உண்டாகின்ற தீமைகள் பற்றிய கவிதைகள் 487 – 488

4.7.2.2 தீண்டாமை தொடர்பான கவிதைகள் 488 – 490

4.7.3 இறைவன் புகழ்பாடும் கவிதைகள் 490 – 491

4.7.4 பெண்கள் முன்னேற்றம் தொடர்பாக வெளிவந்த கவிதைகள் 491 – 492

4.7.5 பொருளாதாரம் தொடர்பான கவிதைகள் 492 – 492

4.7.6 மக்கள் அன்றாடம் எதிர் நோக்குகின்ற பிரச்சினைகள் பற்றிக் கூறுகின்ற கவிதைகள் 493 – 494

4.7.7 தத்துவக் கருத்துக்களை வெளிப்படுத்தும் கவிதைகள் 494 – 495

4.7.8 வர்க்க முரண்பாடுகளை வெளிப்படுத்துகின்ற கவிதைகள் 495 – 495

4.7.9 நகைச் சுவைக் கவிதைகள் 496 – 497

4.7.10 காதல் கவிதைகள் 497 – 497

4.7.11 இயற்கையை விழித்துப் பாடப்பட்ட கவிதைகள் 498 – 499

4.7.12 மொழி பெயர்ப்புக் கவிதைகள் 498 – 499

4.8 ஈழகேசரியும் கட்டுரை இலக்கியமும் 500 – 516

4.8.1 சமயக் கட்டுரைகள் 501 – 503

4.8.2 இலக்கியக் கட்டுரைகள் 503 – 504

4.8.3 அரசியல் கட்டுரைகள் 504 – 506

4.8.4 வரலாற்றுக் கட்டுரைகள் 506 – 507

4.8.5 கல்விக் கட்டுரைகள் 507 – 509

4.8.6 பொருளாதாரக் கட்டுரைகள் 509 – 510

4.8.7 சமுதாய மூட நம்பிக்கைகள், சமூகச் சீரழிவுகள் பற்றிய கட்டுரைகள் 510 – 512

4.8.8 பெண்களின் முன்னேற்றந் தொடர்பான கட்டுரைகள் 512 – 516


## இயல் – 05


முடிவுரை 535 – 549

BIBLIOGRAPHY 550 – 576

பின்னிணைப்பு – 1

ஈழகேசரியில் வெளிவந்த சிறுகதைகள் 577 – 612

பின்னிணைப்பு – 2

ஈழகேசரியில் வெளிவந்த நாவல்கள் 613 – 616

# முன்னுரை

"ஈழத்தமிழரின் சமூக அரசியல் வளர்ச்சிக்கு ஈழகேசரி ஆற்றிய பங்களிப்பு" என்ற இவ்வாய்வில் ஈழகேசரிப் பத்திரிகை வெளிவந்த காலப்பகுதியில் வாழ்ந்த ஈழத்தமிழர்களின் சமூக, அரசியல் வரலாற்றில் இப்பத்திரிகையின் பங்களிப்பு ஆராயப்படுகின்றது. இவ்வாய்வில் மூல ஆவணமாகப் பயன்படுத்தப்பட்ட இப்பத்திரிகை 1930-58 காலப்பகுதியில் தொடர்ச்சியாக 28 வருடங்கள் வெளிவந்த வாராந்தப் பத்திரிகையாகக் காணப்படுகின்றது. ஈழகேசரியானது தன்து காலத்தில் வாழ்ந்த ஈழத்தமிழ் மக்களது வரலாற்றின் இயல்புகளைத் தெளிவாகப் படம் பிடித்துக் காட்டுகின்றது. ஈழத்தமிழர் எனக் குறிப்பிட்டாலும் இப்பத்திரிகை யாழ்ப்பாணத் தமிழர்களின் நடவடிக்கைகளுக்கே பெருமளவு முக்கியத்துவத்தைக் கொடுத்துச் செய்திகளைத் தனது வெளியீடுகளில் பிரசுரித்து வந்தது. அவ்வகையில் இப்பத்திரிகையினை ஆதாரமாகக் கொண்டு இக்காலப்பகுதிக்குரிய ஈழத்தமிழர் சமூக, அரசியல் வரலாற்றில் இதன் பணி ஆராயப்படுகின்றது.

இவ்வாய்வின் மூலம் பல்வேறு நோக்கங்கள் நிறைவேற்றப்படுகின்றன. ஈழத்தமிழர்களின் இக்கால வரலாற்றினை அறிந்து கொள்வதற்கு இச்சமூகத்திலிருந்து தோன்றி அவர்களுடன் உறவாடி வெளிவந்த ஆதாரமாக ஈழகேசரி காணப்படுவதால் அது தருகின்ற தகவல்கள் ஈழத்தமிழர் சமூக அரசியல் வரலாற்றைப் பொறுத்துச் சிறப்பிடம் பெறுகின்றன. மேலும் இக்கால ஈழத்தமிழர் வரலாற்றினை இது வரை எவரும் ஒரு தமிழ்ப்பத்திரிகையை மூல ஆதாரமாகக் கொண்டு ஆராயவில்லை. அந்தவகையில் இவ்வாய்வானது பிற்பட்ட ஆய்வுகளுக்கெல்லாம் ஒரு முன்னோடியாக அமையுமென நான் கருதுகின்றேன்.

இவ் ஆய்வுக்கான தரவுகள் என்னால் பல்வேறு வழிகளில் பெறப்பட்டன. ஈழகேசரிப் பத்திரிகையே இவ் ஆய்வில் மூல ஆவணமாகப் பயன்படுத்தப்பட்டுள்ளது.

இவற்றினைவிட இக்கால வரலாற்றினை அறிந்து கொள்வதற்கு இவ்வாய்வில் சமகாலத்தில் வெளிவந்த பத்திரிகைகளான சுதந்திரன், இந்துசாதனம், பாதுகாவலன் போன்ற பத்திரிகைகளும், பிற்பட்ட காலங்களில் வெளிவந்த பல பத்திரிகைகளும் பயன்படுத்தப்பட்டுள்ளன. மேலும் பிற்பட்ட காலங்களில் வெளிவந்த பல நூல்கள் சஞ்சிகைகள் இவற்றுக்கு ஆதாரமாக, இச்செய்திகளைப் பலப்படுத்துவதற்கு உபயோகிக்கப்பட்டுள்ளன. இவற்றினைவிட இக்காலத்தில் வாழ்ந்த பலரதும், மற்றும் குறிக்கப்பட்ட சம்பவங்களுடன் தொடர்புபட்ட சிலரையும் நேரடியாகக் கண்டு உரையாடிப் பெறப்பட்ட தகவல்கள் இவ்வாய்வில் பயன்படுத்தப்பட்டுள்ளன.

இவ்வாய்வினை மேற்கொண்ட போது பல பிரச்சினைகளைச் சந்திக்க வேண்டிய நிலைமைகள் ஏற்பட்டன. குறிப்பாக இவ்வாய்வு தொடர்பாக வெளிவந்த நூல்கள், கட்டுரைகள் போன்றன ஒப்பீட்டு ரீதியில் குறைவாகவே காணப்படுகின்றன. அதுமட்டுமன்றி ஈழகேசரியில் வெளிவந்த பல ஆக்கங்களை வெளியிட்டவர்களின் பெயர்கள் பெருமளவிற்குப் புனைபெயர்களாகவே காணப்படுகின்றன. இதன் காரணமாக அவற்றை இலகுவில் இனங்காணமுடியாததாக இருந்தன. மேலும் பலரின் பெயர்களுக்கு முன்னால் முதல் எழுத்துக்கள் காணப்படவில்லை. இவை எல்லாவற்றுக்கும் மேலாக இவ்வாய்வில் மூல ஆவணமாகப் பயன்படுத்தப்பட்ட ஈழகேசரியின் பெரும்பாலான வெளியீடுகள் மிகவும் பழுதடைந்த நிலையிலேயே காணப்பட்டன.

இவ்வாய்வின் போது விளக்க வந்த விடயத்தைத் தெளிவாக விளக்கவும் குறிக்கப்பட்ட கருத்தினைச் சார்ந்து நிறுவுவதற்கும் சில இடங்களில் கூறப்பட்ட கருத்துக்கள், நபர்களின் பெயர்கள் என்பவை திரும்பவும் எடுத்துக்காட்டப்பட்டுள்ளன. எனவே ஆய்வாளர் இதனைக் கூறியது கூறல் எனும் குற்றமாகக் கருதாமல் விளக்கம் கருதிக் கூறப்பட்டதாகக் கருதுதல் வேண்டும்.

இவ்வாய்வு தொடர்பாக இதுவரை முழு அளவிலான ஆய்வுகளோ, நூல்களோ வெளிவரவில்லை. ஆயினும் இப்பத்திரிகையின் ஊடாக இக்காலப்பகுதிக்கான ஈழத்தமிழர் வரலாற்றின் சில பகுதிகளைக் கூறுகின்ற ஒரு சில நூல்களும்

ஆய்வுக்கட்டுரைகளும் வெளிவந்துள்ளன. குறிப்பாக கனக. செந்திநாதனின் ஈழம் தந்த கேசரி பேராசிரியர் கா.சிவத்தம்பியின் ஈழகேசரி நா. பொன்னையா நினைவுப் பேருரை என்பனவும் இவற்றில் குறிப்பிடத்தக்கன.

இவ்வாய்வானது ஐந்து பிரதான அத்தியாயங்களாகப் பிரிக்கப்பட்டு ஆய்வு செய்யப்படுகின்றது. இதன் முதலாவது அத்தியாயத்திலே "ஈழமும் பத்திரிகைத் துறையும்" என்ற தலைப்பின் கீழ் பல்வேறு விடயங்கள் ஆராயப்படுகின்றன. ஈழத்தில் எவ்வாறு பத்திரிகைகள் தோன்றின, அவை எவ்வாறு வளர்ந்தன, ஈழகேசரி எத்தகைய சூழ்நிலையில் தோன்றியது, இப்பத்திரிகையின் ஸ்தாபகர் பொன்னையாவின் நடவடிக்கைகள், இப்பத்திரிகையின் பொதுவான இயல்புகள் என்பன இப்பகுதியில் நோக்கப்படுகின்றன.

இரண்டாவது அத்தியாயத்தில் ஈழகேசரி அக்காலச் சமூக வளர்ச்சிக்கு ஆற்றிய பங்களிப்பு ஆராயப்படுகின்றது. இதில் "ஈழத்தமிழரின் சமூக வளர்ச்சியில் ஈழகேசரி" என்ற தலைப்பின் கீழ் அக்காலத்தில் காணப்பட்ட சாதிப்பிரச்சினைகள், சைவ ஆலயங்களில் காணப்பட்ட ஊழல்கள், சீர்கேடுகள், மரபுகள் அக்காலத்தில் யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற சுப்பிறிம் கோட்டு வழக்குகள், அக்கால கல்வி நிலை, அக்கால பொருளாதார நிலை, பொதுமக்கள் அன்றாடம் எதிர்நோக்கிய பல்வேறு பிரச்சினைகள் போன்ற பல்வேறு விடயங்கள் இப்பகுதியில் நோக்கப்படுகின்றன.

மூன்றாவது அத்தியாயத்திலே அக்காலப்பகுதிக்குரிய ஈழத்தமிழர் அரசியல் வளர்ச்சிக்கு ஈழகேசரியின் பங்களிப்பு ஆராயப்படுகின்றது. "ஈழத்தமிழரின் அரசியல் வளர்ச்சியில் ஈழகேசரி" என்ற தலைப்பின் கீழ் டொனமூர், சோல்பரி அரசியல் திட்டங்கள் நடைமுறையில் இருந்த காலத்தில் நடைபெற்ற பல்வேறு நிகழ்வுகள், ஈழத்தமிழர்களின் தேர்தல் பகிஷ்கரிப்பு போராட்டம், தேசியக்கொடிப் போராட்டம், மொழிப் போராட்டம், அதனைத் தொடர்ந்து ஏற்பட்ட பல்வேறு போராட்டங்கள், பண்டா - செல்வா

ஒப்பந்தம், தென்னிந்தியத் தோட்டத் தொழிலாளர் பிரச்சினைகள் போன்ற பல அரசியல் நிகழ்வுகள் பொறுத்து இப்பகுதியில் நோக்கப்படுகின்றன.

நான்காவது அத்தியாயத்திலே “ஈழத்து இலக்கிய வளர்ச்சியில் ஈழகேசரி’ என்னும் தலைப்பில் ஈழத்தமிழரின் இலக்கிய வளர்ச்சிக்கு ஈழகேசரியின் பங்களிப்பு ஆராயப்படுகின்றது. அந்தவகையில் சிறுகதைகள், நாவல்கள், நாடகங்கள், கவிதைகள், கட்டுரைகள் போன்ற இலக்கியங்களுக்கு முன்னுரிமை கொடுக்கப்பட்டு இப்பகுதியில் நோக்கப்படுகின்றன.

இதன் இறுதி அத்தியாயம் முடிவுரையாகக் காணப்படுகின்றது.